பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 12 செவ்வாய்க்கிழமை 29.10.2024 கதிர் 356

### இனி இது ரகசியம் அல்ல!

அநுர தரப்புக்கு தாம் ஆட்சி அதிகாரத்தைக்கைப்பற்றிவிட்டோமா என்பதில்சந்தேகம்இருக்கும்போன்று தெரிகிறது. நீண்ட காலமாக எதிர்க்கட்சி வரிசையிலேயே ☞ 2

## 30 பாடசாலை நாள்கள் 2025இல் குறைகின்றன

2025ஆம் ஆண்டில் அரச பொது விடுமுறை மற்றும் பொதுப் பரீட்சைகளை ஒட்டிய பாடசாலை விடுமுறைகளால் சுமார் 30 பாடசாலை நாள்கள் குறைகின்றனஎன்றுகல்விஅமைச்சுதெரிவித்துள்ளது.

அடுத்தஆண்டில்காணப்படும்அரசவிடுமுறைகள் மற்றும் பாடசாலை ஆண்டு விடுமுறையின் பின் ஜனவரி 27ஆம் திகதி ஆரம்பிக்கப்படுகின்றமை ஆகிய காரணிகளால் அவ்வாறு உரிய நாட்களின் எண்ணிக்கை அடிப்படையில் பாடசாலைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாடசாலை கால அட்டவணை தொடர்பில் 1997ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய ஆண்டொன்றிற்கு 210 நாட்கள் பாடசாலைகள் நடத்தப்படவேண்டும். ஆனால், அடுத்த ஆண்டில் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்துப் பாடசாலைகளிலும் 181 நாட்கள் மாத்திரமே கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான இயலுமை காணப்படுவதாக கல்வி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது. ☞ 2

## அறுகம்பேத் தாக்குதல் திட்டத்தின் பின்னால் மேலும் சந்தேகநபர்கள்

அறுகம்பை சுற்றுலா பிரதேசத்தில் தாக்குதல் மேற்கொள்ள திட்டமிட்ட சம்பவம்தொடர்பில்மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடன் இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தோடு தொடர்புபட்ட மேலும் சில சந்தேகநபர்கள் பற்றிய தகவல்கள் தெரியவந்துள்ளன என்று பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினால் கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேனவிற்கு நேற்று அறிவிக்கப்பட்டது. ☞ 2

## சுற்றுலாவிகள் வருகையில் இதுவரை வீழ்ச்சி இல்லை

அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட சிலநாடுகள்இலங்கைக்கான தங்களது பயண ஆலோசனைகளை புதுப்பித்திருந்த போதிலும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சிஏற்படவில்லைஎன உள்வரும், மற்றும்வெளிச்செல்வதற்கான பயண முகவர் சங்கத்தின் தலைவர் நளின் ஜயசுந்தர இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

எச்சரிக்கைகள் காரணமாக ☞ 8

## நாடாளுமன்றை சுத்தப்படுத்தும் பணி ஆரம்பம்

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

மக்களின் எதிர்பார்ப்புகளுடன் இணைந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு நாடாளுமன்றத்தினை சுத்தப்படுத்த வேண்டியது மக்களின் கடமை என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

புவக்பிட்டியவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகாரத்திலும் அரசியல் கலாசாரத்திலும்தேவையானமாற்றங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயங்படுகின்றது.

ஊடகக் காட்சிகள் அல்லது ஏமாற்றும் கதைகளில்நாம்கவனம்செலுத்தவில்லை. மாறாக வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மைமூலம்நம்பிக்கையைவளர்ப்பதில் கவனம் செலுத்துகின்றோம்.

எங்களிடம் நிறைவேற்று அதிகாரம் மட்டுமே உள்ளது, அதை உலகின் மிகச்சிறிய அமைச்சரவை மூலம் நாங்கள் செயல்படுத்துகிறோம். இந்த அமைப்பு மற்றும் அரசியல் கலாசாரத்தில் தேவையான மாற்றங்களை நாங்கள் முறையாகச் செயல்படுத்துகிறோம்.

எங்களிடமிருந்துஊடககாட்சிகளையோ ஏமாற்றும் கதைகளையோ மக்கள் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் ☞ 2

### தெற்கு கட்சிகளின் அடிவருடிகள் என

## சுயேச்சைகளைக் குற்றஞ்சாட்டும் தகுதியற்றவர் அரச பினாமி சுரேஸ்

### ‘பசு’ சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு கொந்தளிப்பு




தெற்கு அரசின் அடிவருடியாகவும் ஒட்டுக் குழுவாகவும் இருந்த அமைப்பின் தலைவரானசுரேஸ்பிரேமச்சந்திரன் எப்படி யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சைகளை தெற்கு கட்சிகளின் அடிவருடிகள் என்று சொல்ல முடியும்? அரச பினாமியான அவர், மற்றவர்களை தெற்கு கட்சிகளுக்காக களமிறங்கியிருப்பவர்கள் என்று குற்றஞ்சாட்டும்அருகதையற்றவர். சுயேச்சைக் குழுக்கள் மீது சகட்டு மேனிக்கு குற்றச்சாட்டுக்கள் ☞ 2

## 3ஆவது விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

வெடிகுண்டு அச்சுறுத்தல் காரணமாக மற்றொரு இந்திய விமானம் நேற்றுப் பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. இந்த மாதத்தில் இவ்வாறான அச்சுறுத்தல் காரணமாகத் தரையிறங்கிய மூன்றவாது விமானம் இது.

விமானத்தில் வெடிகுண்டுகள் இருக்கின்றனவா என்பது தொடர்பில் தீவிரமான சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றனஎன்றுஅதிகாரிகள்தெரிவித்தனர்

இந்தியன் ஏர்லைன்ஸ் விமானமே வெடிகுண்டு மிரட்டலால் தரையிறக்கப்பட்டது. கட்டுநாயக்காவுக்கு வருகைதந்த ஏஹுா-281விமானம் மாலை 4.05 மணிக்கு தரையிறங்குவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தது, வெடிகுண்டுமிரட்டலால் 8 நிமிடங்களுக்கு முன்னதாக, 3.57 மணிக்கே அவசரமாகத்தரையிறக்கப்பட்டது. ஏர்பஸ் ஏ-320 ரகத்தைச்சேர்ந்த இந்தவிமானத்தில்108பயணிகள் மற்றும் 8 பணியாளர்கள் இருந்தனர். ☞ 2




## தேசிய பாதுகாப்பை ஏற்படுத்த விரைவு நடவடிக்கை தேவை

### வலியுறுத்துகிறார் நாமல் ராஜபக்ச

நாட்டில் மீண்டும் தேசிய பாதுகாப்பை ஏற்படுத்த ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்பு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொது ஜன பெரமுனவின் தேசிய பட்டியல் வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அட்டனில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நம்பிக்கையைக் ☞ 2

## 88 தேர்தல் முறைப்பாடுகள் அவற்றில் 16 வன்முறைகள்

2024 பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய 88 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவற்றில்வன்முறைச்சம்பவங்கள் தொடர்பில் 16 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறும் செயற்பாடுகள் தொடர்பில் 72 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

இதனிடையே தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 24 மணித்தியாலங்களில் 75 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் முறைப்பாடுகள்முகாமைத்துவமத்திய நிலையத்திற்கு 28 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாடுகள் பிரிவிற்கு 47 முறைப்பாடுகளும் கிடைக்கபெற்றுள்ளதாக ☞ 8

## தொடருந்து நிலைய அதிபர்கள் போராட்டத் தயாராகின்றனர்

### அரசுக்கு 72 மணி நேர எச்சரிக்கை

தொடருந்து நிலைய அதிபர்கள் அடுத்த 72 மணி நேரத்துக்குள் தொழிற்சங்க நடவடிக்கையைமேற்கொள்ள உள்ளனர் என்று நேற்று அறிவித்துள்ளனர். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் இடம்பெறும் முதல் தொழிற்சங்கநடவடிக்கையாக இந்தப் போராட்ட அறிவிப்பு வந்துள்ளது.

நடைமுறைகளை மீறி தொடருந்து நிலைய அதிபர்களைநியமித்தமைக்கு எதிராகவே குறித்த தொழிற்சங்கநடவடிக்கையை மேற்கொள்வது என்று இலங்கை தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கம் தீர்மானித்தது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறைதொடருந்துநிலைய அதிபர்கள்மற்றும்தொடருந்துக் கட்டுப்பாட்டாளர்களைக்குறித்த பதவிகளுக்கானபரீட்சைகளை நடத்தி நியமிப்பதற்கு அல்லது பதவி உயர்வு வழங்கி சம்பள உயர்வு வழங்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ☞ 2

### லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளில்

## 9 மாதங்களில் 67 பேர் கைது

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டின்பேரில்கடந்த 9 மாதங்களில் 67 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில், இலஞ்சம் ஊழல் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

# நீர்வேலி தாக்குதல் சம்பவம் 8 பேர் கைதாகிப் பிணையில்

யாழ்ப்பாணத்தில் தேர்தல் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது வன்முறைக்கும்பல்ஒன்றினால்தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த தமிழ் மக்கள் கூட்டணியினரைச்சேர்ந்தமூவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் மன்று அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நீர்வேலிப் பகுதியில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணியினர் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை முச்சக்கர வண்டியில் வந்த நால்வர் அடங்கிய கும்பல் தாக்குதலை மேற்கொண்ட பின்னர் அங்கிருந்து சென்று , மீண்டும் சுமார் 30 பேருடன் வந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர் என்று தமிழ் மக்கள் கூட்டணியினர் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

அதில் பெண் உள்ளிட்ட மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்நிலையில், தாக்குதலுக்கு இலக்கானவர்கள் கோப்பாய் பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடுசெய்திருந்த நிலையில், தாக்குதலை மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்படும் தரப்பினரும் பரஸ்பர முறைப்பாட்டினை பொலிஸ் நிலையத்தில் வழங்கியிருந்தனர்.

அதனை அடுத்துப் பொலிஸார், தாக்குதலுக்கு இலக்காகி யாழ் . போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தமிழ்மக்கள்கூட்டணியின்ஆதரவாளர்களுக்கு வைத்தியசாலையில்கட்டிலுடன்கைவிலங்கிட்டு சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

இந்நிலையில் தாக்குதலுக்கு இலக்கான மூவர் மற்றும் தாக்குதலை மேற்கொண்டனர் என குற்றம் சாட்டப்பட்ட ஐவர் என 8 பேரையும் யாழ் . நீதிவான் நீதிமன்றில், நேற்று திங்கட் கிழமை கோப்பாய் பொலிஸார் முற்படுத்தினர்.

அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து, அனைவரையும் பிணையில் செல்ல அனுமதித்த மன்று , வழக்கினை எதிர்வரும் ஜனவரி மாதம் 21ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

## இனி இது .....

இருந்துவிட்டு இப்போதுதான் ஆளும் தரப்புக்கு வந்திருப்பதால் நாளாந்தம் தங்களைத் தாங்களே கிள்ளிப் பார்த்துக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள் போலும்.

அதிகாரத்திற்கு வந்ததற்குப் பின்னர் ஊழல் செய்தவர்கள் மீதும், முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் மீதும் துரதமாக தீவிர நடவடிக்கை எடுப்பதற்குப் பதில், இன்னும் அது பற்றிய செய்திகள் வெளிவருவதிலேயே குறியாக இருக்கிறார்கள் போலுள்ளது.

அரச இல்லங்களில் இருந்து அமைச்சர்கள் வெளியேறவேண்டும் என்று அரச தரப்பு உத்தரவிட்டது. ஆனால் அதைப் பல அமைச்சர்கள் மதிக்கவில்லை. தற்போதைக்கு அமைச்சர்களின் ஆக்கிரமிப்பில் உள்ளவற்றில் 12 வீடுகளே அரசுக்குச் சொந்தமானவை. ஏனையவை ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்டவையாம். அவர்களை அங்கிருந்து தூக்கி வெளியே கடாசிவிடுவதற்குப் பதில் அவர்களை வெளியேற்ற சட்ட நடவடிக்கை பற்றிச் சிந்திக்கிறார்களாம்.

இதுபோக சிங்களப் பத்திரிகையில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை மேற்கோள்காட்டி முன்னாள் அமைச்சர்கள், அரசியல்வாதிகளின் முறைகேடுகள் தொடர்பில் தொடர்ந்தும் செய்திகள் வெளிவரப் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் தகவல்.

ஊழல் மோசடி அரசியல்வாதிகளை சட்டையைப் பிடித்து உலுப்புவார்கள் என்று பார்த்தால் இவர்கள் நேரில் நின்றுகூடக் கேள்வி கேட்கமாட்டார்கள் போலுள்ளது. எதிர்க் கட்சியாக இருந்தபோதாவது நேரடியாகக் குற்றங்சாட்டினார்கள். இப்போது ஊடகங்களின் பின்னால் மறைந்துகொண்டு பேசுகிறார்கள்.

அப்படி அண்மையில் வந்திருக்கும் தகவல், ஆண்டு இறுதிவரை, அமைச்சர்களுக்கான அரச வீடுகளுக்கு வழங்கப்பட்ட இருபத்தி மூன்று குடிதண்ணீர் இணைப்புகளுக்காகச் செலுத்தவேண்டியுள்ள தொகை , 50 லட்சம் ரூபாய்களாம்.

இப்படி வசூலிக்கப்படாமல் இருக்கும் நாடாளுமன்ற அமைச்சர்களில் சிலர் ஏற்கனவே உயிரிழந்துவேறு விட்டார்களாம். உயிரிழந்த மக்கள் பிரதிநிதிகளிடம் நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணத்தை வசூலிக்க இயலாது என நாடாளுமன்ற பொதுச் செயலாளர் கைவிரித்துவிட்டார் என்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

ஏன் இந்த நிலுவைத் தொகையை வசூலிக்கவில்லை என்று நீர் வழங்கள் மற்றும் நீர் விநியோகத் துறை அதிகாரிகளைக் கேட்டால், வசூலிக்கப்பரிந்துரைத்திருக்கிறோம் என்று பதில் வருகின்றதாம். மேடையில் கத்துகிறத அளவிற்கு 'சிஸ்டம் சேன்ஜ்' அவ்வளவு இலகுவில்லை என்பது இப்போது அவர்களுக்குப் புரிந்திருக்கும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## சுயேச்சைகளைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படுகின்றன. சுயேச்சைகளாகப் போட்டியிடும் எல்லோருக்கும் அது பொருந்தாது. எனவே குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் பொதுவாக அனைத்து சுயேச்சைகள் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்காமல், தாம் யார் மீது இலக்கு வைத்து குற்றஞ்சாட்டுகிறார்கள் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வேட்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது பரப்புரைச்சாதனங்களிலே ஒரு குற்றச்சாட்டை சுயேச்சைகள் மீது சுமத்தியிருக்கிறார். யாழ். மாவட்டத்தில் சுயேச்சைகளாகப் போட்டியிடுபவர்கள் தெற்கில் உள்ள கட்சிகளின் அடிவருடிகளாக இருந்து அவர்களுடைய சுகபோகங்களுக்கான நலன்களுக்காகத்தான் போட்டியிடுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

சுரேஸ் பிரேமச்சந்திரன் இலங்கை அரசின் அடிவருடியாக இருந்தது எங்களுக்குத் தெரியும். சந்திரிகா ஆட்சியில் நீங்கள் அவருக்கு முண்டு கொடுத்ததும் அரச பதவி பெற்றதும் எங்களுக்குத் தெரியும். நாங்கள் எங்கள் வாழ்நாளிலே உங்கள் ஆயுதக் குழுக்களினால் பல தடவைகள் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளோம். அசோக்கா ஹோட்டலில் நாங்கள் அழைத்து விசாரிக்கப்பட்டிருக்கின்றோம். உங்களைப் பார்த்து எப்போதும் பயத்தோடு வாழ்ந்த அந்தச் சூலை நாம் மறந்துவிடவில்லை.

அப்படிப்பட்ட நீங்கள் மற்றவர்களை தெற்குக் கட்சிகளின் அடிவருடிகள் என்று சொல்வதை நாங்கள் மிகவன்மையாகக் கண்டிக்கின்றோம். அந்தச் சொல்லை உச்சரிக்கும் அருகதையற்றவர் சுரேஸ் பிரேமச்சந்திரன். அரசோடு சேர்ந்தியங்கிய ஒட்டுக்குழுவினரில் நீங்களும் ஒருவர். நீங்கள் அடிவருடியாக இருந்ததற்காக போட்டியிடும் எல்லோரையும் சலுகைகளுக்காகவும் அற்ப விடயங்களுக்காகவும்தான் இங்கே போட்டியிடுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டமுடியாது. அதுவும் தகுதியற்ற ஒருவர் அப்படிச் சொல்லவே முடியாது.

மற்றவர்களை இப்படிச் சொல்வதன் மூலம் நீங்கள் உங்களைப் புனிதப்படுத்திக்கொள்ள முடியாது. அடுத்தவர்களை அடிவருடிகள் என்று சொல்லும் அளவிற்கு நீங்கள் ஒன்றும் புனிதமானவர் இல்லை. எந்தவொரு குற்றச்சாட்டையும் பொதுவில் சொல்லாமல் யார் மீது சொல்கிறீர்களோ அவர்களை அடையாளப்படுத்திச் சொல்வதற்கு முதலில் பழகிக்கொள்ளுங்கள். உங்களைப் போன்ற தெற்குக் கட்சிகளின் பினாமிகளை மக்கள் ஆதரிப்பார்கள் என்று தொடர்ந்தும் எதிர்பார்க்காதீர்கள்.

பொதுக் கட்டமைப்பிடம் இருந்து சங்கு சின்னத்தை திருடிய நீங்கள், சங்கு சின்னத்திற்காக உண்மையாக உழைத்தவர்கள் தமிழ் மக்களிடம் செல்லும்போது அவர்களை தெற்குக் கட்சிகளின் அடிவருடிகள் என்று கூறி பொய்மைகளையும் பரப்பாதீர்கள். அது ஏற்றுக்கொள்ள முடியாதது. நீங்கள் திருடர்கள் என்பதற்காக மற்றவர்களையும் அப்படியே நினைப்பதைத் தவிருங்கள் - என்றார்.

நாடாளுமன்றத் தேர்தல் களத்திலே ஊடகங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஜனநாயகப்பண்போடு நடந்துகொள்ளவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட அரசியல் விவாதம் ஒன்றுக்கு யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிகள் சிலவற்றில் இருந்து மட்டுமே ஆட்கள் அழைக்கப்பட்டமை ஒரு பக்கச்சார்பான செயல் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். உண்மையான விவாதமாயின் சுயேச்சைகளும்கூட அதற்கு அழைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார். சில கட்சிகளை மட்டும் வெற்றி பெற வைப்பதற்கான அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றின் நிகழ்ச்சி நிரலின் கீழ் இத்தகைய பக்கச்சார்பான விவாதங்கள் நடத்தப்படுவதைக் கண்டித்த அவர், அனைவருக்கும் பொதுவான விவாதத்தை ஒழுங்கு செய்து நடத்துவதற்கு தமிழர் சமஉரிமை இயக்கம் தயாராக இருக்கின்றது என்றும் கட்சிகளின் பிரதிநிதிகள் அதில் பங்கேற்குமாறும் அழைப்பு விடுத்தார்.

## 9 மாதங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

81 சோதனை நடவடிக்கைகள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் மேற்கொண்டதுஎன்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் தொடர்பாக 259 முறைப்பாடுகளும், ஊழல் தொடர்பாக 466 முறைப்பாடுகளும், முறைகேடாகச் சொத்துச் சேர்த்தது தொடர்பாக 86 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளனன.

810 முறைப்பாடுகள் தொடர்பில் போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தினாலும் அல்லது இலஞ்ச ஊழல் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வராத காரணத்தினாலும் தள்ளுபடி செய்யப்பட்டதாக அந்த ஆணைக்குழு தெரிவித்தது.

## தொடருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும் குறித்த நடைமுறைக்கு மாறாகத் தற்போது தொடருந்து அதிபர்கள் நியமனம் இடம்பெறுவதாக தெரிவித்தே இந்த தொழிற்சங்க போராட்டம் எதிர்வரும் 72மணித்தியாலங்களுக்குள்தொடங்கப்படும் என தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

## அறுகம்பேத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் தங்கியுள்ள சுற்றுலா வலயத்தை இலக்குவைத்து பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொள்ள திட்டமிட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் குறித்த வழக்கில், விசேட நகர்த்தல் பத்திரத்தை தாக்கல்செய்தபொலிஸார் இந்த விவரங்களை வெளிப்படுத்தினர்.

வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் தலைவர்கள், பிரதிநிதிகளைப் பின்பற்றுபவர்களாக மாறி குறித்த அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு தெரிந்தே இந்த நாட்டில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்களை அடையாளம் காண்பதற்காக தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களிடம் தொடர்ந்தும் வாக்குமூலம் பெறப்பட வேண்டியுள்ளதாகவும் அதற்கு அனுமதிவழங்குமாறும் குறித்த விசேட நகர்த்தல் பத்திரத்தை தாக்கல் செய்து விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

சம்பவம் தொடர்பில் கடந்த செப்டம்பர் மாதத்தில் இருந்தே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களின் ஊடாக அடுத்தகட்ட விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் இதன் காரணமாக குறித்த அனுமதியைவழங்குமாறும் அவர்கள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் முன்வைத்தவிடயங்கள், விசேட அறிக்கையை ஆராய்ந்தமேலதிகநீதிவான், விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பில் விரைவாக நீதிமன்றத்திற்குஅறிவிக்குமாறுஉத்தரவிட்டார்.

## 3ஆவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விமானத்தில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளதாக இந்தியாவின் புதுடெல்லியில்உள்ளஇந்தியன்ஏர்லைன்ஸின் தலைமை அலுவலகத்திற்கு ஒரு அநாமதேய தொலைபேசி அழைப்பு வந்தது, உடனடியாக அந்தச் செய்தி கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள இந்தியன் ஏர்லைன்ஸ் மேலாளருக்கு அனுப்பப்பட்டது. அவர் இந்தச் செய்தியை கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, விமானத்தை அவசரமாக தரையிறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய, தீயணைப்பு வாகனங்கள், வெடிகுண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர், வைத்தியர்கள், தாதியர்கள், பயிற்சி பெற்ற வெடிகுண்டு கண்டறியும் நாய்கள், இலத்திரனியல் வெடிகுண்டுகளை கண்டறியும் உபகரணங்கள், அவற்றை இயக்கும் அதிகாரிகள், இராணுவ கொமாண்டோ படையினர், மீட்பு நடவடிக்கை அதிகாரிகள் என அனைத்தும் ஓடுபாதையில் தயார்ப்படுத்தப்பட்டன.

விமானத்தில் வந்த பயணிகள் அவசரமாகத் தரையிறக்கிவிடப்பட்டு, பயணிகளின் பயணப்பொதிகள் மற்றும் ஏனைய பொருட்கள் வெளியே எடுத்துச் செல்லப்பட்டு சோதனையிடப்பட்டன என்று கட்டுநாயக்க விமான நிலைய ஊடக மையத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் இந்த மாதம் 19, 24 ஆகிய தினங்களுலும் இந்திய விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. சோதனைகளின் பின்னர் அது வெறும் புரளி என்பது கண்டறியப்பட்டது.

## நாடாளுமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர்மையாகச் செயற்படுகின்றோம். நாங்கள் வெளிப்படையான தொடர்புகள் மூலம் மக்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்பியுள்ளோம், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இந்த அடித்தளம் அவசியமானது.

நிறைவேற்று அதிகாரத்தை சுத்தப்படுத்தி ஜனநாயகசக்தியாகமாற்றுவதற்குஎடுக்கப்பட்ட முதல்நடவடிக்கையில்வெற்றிபெற்றுள்ளோம். தோழர், அநுரகுமார திசநாயக்கவின் வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்படும். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று கணிசமான காலப்பகுதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தை சுத்தப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கான தனது உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காகவே அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

நவம்பர் 14 நாடாளுமன்றத்தைச் சுத்தப்படுத்த உங்களுக்கு வாய்ப்பு உள்ளது, நீங்கள் ஏற்கனவே நிறைவேற்று அதிகாரத்தைசுத்தப்படுத்திவிட்டீர்கள், இப்போது, நாடாளுமன்றத்தைதூய்மைப்படுத்துவதற்கான நேரம் இதுவாகும் என்றார்.

## 30 பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த ஆண்டில் முதலாம் தவணை பாடசாலைகல்வி நடவடிக்கைகளின் முதலாம் கட்டம் ஜனவரி 27ஆம் திகதி முதல் ஏப்ரல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதனிடையே, 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச பொது விடுமுறை ஞாயிறு மற்றும் பருவகாலவிடுமுறைதினங்களில்அனைத்துப் பாடசாலைகளும் மூடப்படும் எனவும் விசேட காரணங்களுக்காக ஏதேனும் ஒருநாளில் பாடசாலைகள் மூடப்படுமாயின் அந்த நாட்களுக்காக மாற்று தினங்களில் பாடசாலைகள் இடம்பெறும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியெழுப்புவதற்காக சர்வதேச அலுவலகங்கள், தூதரகங்கள் மற்றும் சர்வதேச புலனாய்வு அமைப்புகளுடன் கலந்துரையாடுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கிறோம். அதற்கான பொறுப்பு தற்போதைய ஆளும்தரப்புக்கு உள்ளது.

நாட்டின் புலனாய்வுத் துறை, இராணுவம் மற்றும் பொலிஸாரை பலப்படுத்தினால் இவை அனைத்தையும் எதிர்கொள்ள முடியும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாட்டு நீதிமன்றங்களால் ஒருபோதும் நீதியை தரமுடியாது

## பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு



வெளிநாட்டுத்தலைமீட்டின் கீழ்எமதுநாட்டுப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வெளிநாட்டு நீதிமன்றங்களால் எங்களுக்கு ஒருபோதும் நீதியை வழங்க முடியாது என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம். சர்வதேச நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை எட்டி உதைத்து விட்டு இன்று உலக நாடுகள் செயற்படுகின்றன. இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றஊடகவியலாளர்சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேசிய மக்கள் சக்திக்கு சிங்களக் கட்சி என்ற ஒரு குற்றச்சாட்டு தமிழ் மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றது. நாங்கள் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் எமது கட்சி வேட்பாளர்கள் அனைவரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

இதேபோல் எங்கள் மேல் மற்றும் ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தியானது சர்வதேச விசாரணைக்கு எதிரானவர்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

எங்கள் மேல் விமர்சனங்களை முன்வைப்பவர்களிடம் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். அமைச்சரவைத் தீர்மானங்களை முழுமையாகவாசித்துவிட்டு எங்கள் மீது விமர்சனங்களை முன்வையுங்கள்.

எங்களுக்கு எதிராக தமிழ் மக்களிடம் கூறுவதற்கு எந்த விடயமும் கிடையாது. இதனால் சர்வதேச விசாரணை என்ற விடயத்தை இவர்கள் கையில் எடுத்திருக்கின்றார்கள்.

தமிழ் மக்களை இனவாத ரீதியாகச் சூடாக்கி அதில் குளிர்காய்கின்ற வேலையைத் தமிழ்க் கட்சிகள் செய்துவருகின்றன. எங்கள் மீது இனவாத சாயத்தைப் பூசுகின்ற நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கியுள்ளார்கள்.

வெளிநாட்டுத் தலையீட்டின் கீழ் எங்களுடைய நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வெளிநாட்டு நீதிமன்றங்களால் எங்களுக்கு ஒருபோதும் நீதியை வழங்க முடியாது என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம்.

சர்வதேச நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை எட்டி உதைத்துவிட்டு இன்று உலக நாடுகள் செயற்படுகின்றன. உதாரணமாக பலஸ்தீன பிரச்சினையைக் குறிப்பிடலாம். அங்கு இலட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர்.

இதற்கு எதிராக சர்வதேச நீதிமன்றங்கள் தீர்ப்புகளை வழங்கியுள்ளபோதும் அதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இப்படியான நிலைமை காணப்படுகையில் சர்வதேச நீதிமன்றத்திடம் சென்று நீதியைப் பெறுவது என்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதற்கு ஒப்பானது.

மேலும், புலம்பெயர் தமிழர்களிடமும் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றோம். ஒரு சில அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தாங்கள் புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் எனக் கூறி அரசியல் சித்து விளையாட்டுக்களை மேற்கொள்கின்றார்கள்.

குறித்த கட்சிகளுக்கு எவ்வாறு நிதி சேகரிப்பு நடைபெறுகின்றது என்பது சந்தேகத்துக்கிடமானதாகும். வெளிநாடுகளில் இருந்து பணத்தைக் கொண்டு வந்து 70 வருடங்களுக்கு மேலான போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்ற கீழ்த்தரமான அரசியலை சில கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் செய்கின்றன.

இவை அருவருக்கத்தக்க செயற்பாடுகளாகும். எனவே, புலம்பெயர் தமிழர்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்கின்றோம் எங்களுடைய பெயரைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளிக்க வேண்டாம். - என்றார்.(05)

# முல்லைத்தீவில் யானை தாக்குதலுக்கு இலக்காகி இளைஞன் பரிதாப இறப்பு

முல்லைத்தீவு, முத்தையன்கட்டு பகுதியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் மரணமடைந்த சம்பவம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

முத்தையன்கட்டு குளப்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையை விரட்டி வந்துள்ளனர்.

அவர்களுடன் இணைந்து குறித்த இளைஞனும்யானையைவிரட்டியுள்ளதாகத் தெரியவருகின்றது. இதன்போது இந்த இளைஞனை யானை தாக்கியுள்ளது.

அதனையடுத்து ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே இளைஞன் மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்த குறித்த இளைஞன் ஒட்டுசுட்டான் முத்துவிநாயகபுரம் பகுதியில் வசிக்கும் 21 வயதுடையதுடையவர் ஆவார்.

மரணமடைந்த இளைஞனின் சடலம் ஒட்டுசுட்டான் வைத்தியாசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.

(05)

# சட்டவிரோத மதுபானத்துடன் புத்தளத்தில் இருவர் கைது

புத்தளம், முந்தல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போகஸ் சந்தி பகுதியில் சட்டவிரோத மதுபானத்துடன் இரண்டு சந்தேக நபர்கள் ஞாயிற்றுக் கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முந்தல் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தாரவில்லுவ பிரதேசத்தை சேர்ந்த 22 மற்றும் 30 வயதுடையவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து , 48.75 லீற்றர் (65 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# வெடிபொருள்களுடன் இருவர் பதவியாவில் நேற்றுக் கைது

அநுராதபுரம் மாவட்டம் பதவியா பகுதியில் வெடிபொருள்களை வைத்திருந்த இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதவியா பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில்ஞாயிற்றுக்கிழமை மாலை பதவியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 01 ஆம் மைல் பகுதியில் வாகன சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது, சட்டவிரோதமாக கடத்தப்பட்ட வெடிபொருள்களை பெரிஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட வெடிப்பொருட்களில் 75 கிலோகிராம்துப்பாக்கி, 90 ஜெலிக்னைட் குச்சிகள், 300 டெட்டனேட்டர்கள் மற்றும் 05 வெடிகுண்டுகள் ஆகியவை அடங்கும்.

இதன்போது, ஹிடோகம மற்றும் மாபலடிக்குளம் பிரதேசத்தை சேர்ந்த 28 மற்றும் 30 வயதுடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பயணித்த காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், பதவியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இதுதான் பொறிமுறை மாற்றமா?

நியூயோர்க்கில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஆளும்தரப்பு மேற்கொண்ட பேச்சுக்களின் உண்மை நிலையை அரசுத் தலைவர் உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் என முன்னாள் அரசுத் தலைவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அத்துருகிரியில் தெரிவித்துள்ளார்.

ஆளும்தரப்பு அரசுத் தேர்தலின்போது முன்வைத்த அனைத்துயோசனைகளையும்நடைமுறைப்படுத்தினால் வரவு செலவுத் திட்ட இடைவெளி 2500 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கலாம் என தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க மீண்டும் மக்கள் வரிசைக்கு வருவார்களா? பணவீக்கம் அதிகரித்து வருகிறதா? ரூபாய் மதிப்பு குறையுமா? வட்டி அதிகரிக்குமா என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

சுமார் ஒரு மாத காலத்திற்கு முன்னர் இதுபோன்ற கோரிக்கையை ரணில் விக்கிரமசிங்கவைப் பார்த்து அநுரவும் தேசிய மக்கள் சக்தியினரும் கூறிக்கொண்டிருந்தனர். உண்மையை வெளிப்படுத்துங்கள் என்று நாடாளுமன்றத்தில்கூட கதறியிருக்கின்றனர். ஆனால், அப்போதெல்லாம் நாட்டுக்கு உண்மையை முழுமையாகத் தெரியப்படுத்தவேண்டும் என்று ரணில் நினைத்ததில்லை. பன்னாட்டு நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைக்கூட அவர் முழுமையாக வெளிப்படுத்தவில்லை. இப்போது அவரே ஆளும் தரப்பு உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்கிறார்.

மறுபுறத்தில் எதிர்த்தரப்பில் இருந்தபோது நாட்டுக்கும் மக்களுக்கும் எல்லாவற்றையும் சொல்லவேண்டும் என்று அடம்பிடித்த அநுரவும் தேசிய மக்கள் சக்தியினரும் இப்போது என்ன நடக்கிறது என்று மக்களுக்குச் சொல்லப் பின்னடிக்கிறார்கள்.

நாணயநிதியஅதிகாரிகளுடன்பேச்சுநடத்துவதற்காக மத்திய வங்கி ஆளுநர் மற்றும் அரச உயர் அதிகாரிகள் குழு அமெரிக்கா சென்றிருக்கின்றது. இலங்கைக்கு நிதி வழங்குவது தொடர்பான மூன்றாம் கட்ட மீளாய்வு தொடர்பில் அங்கு பேச்சு இடம்பெற்று வருகின்றது. அங்கிருந்து பன்னாட்டு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்திருந்த மத்திய வங்கி ஆளுநர், நாணய நிதியத்தின் மூன்றாம் தவணை நிதி கிடைப்பது தாமதமாகும் என்று தெரிவித்திருந்தார். அரசின் வருவாயை உயர்த்துவதில் ஏற்பட்டுள்ள சவால்களே இதற்குக் காரணம் என்று அறியப்படுகின்றது.

இது தொடர்பான பேச்சுக்களில் என்ன நடக்கின்றது என்ற உண்மைகளையே இப்போது ரணில் கேட்கிறார். ஆளும் தரப்பு அதற்குப் பதிலளிக்காமல் அமைதியாக இருக்கின்றது. இதற்குமுன்னர்பன்னாட்டுநாணயநிதிய அதிகாரிகள்இலங்கைக்குவந்திருந்தபோதும்அவர்கள் அரசுத் தலைவருடனும் அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சுக்கள்பற்றிமுழுமையானஉண்மைகளைஆளும் தரப்பு நாட்டுக்குத் தெரியப்படுத்தியிருக்கவில்லை.

எதிர்க்கட்சியாக இருக்கும்போது வலியுறுத்தும் விடயங்களை ஆளும் தரப்புக்கு வந்தவுடன் தாங்களே செய்வதில்லை என்பதுதான் இதுவரையில் இலங்கையின் பண்பாடு, கலாசாரம். தேசிய மக்கள் சக்தியும் அதைத்தான் தொடரப் போகின்றது என்றால் அது கூறிய பொறிமுறை மாற்றம்தான் என்ன?

# நீலப் பொருளாதாரம் என்ற எண்ணக்கரு இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கும்?

**கலாநிதி. ஏ. எல். முஹம்மது அஸ்லம்**



இலங்கை போன்ற தீவு நாடுகளுக்கு, கடல் என்பது வெறும் நீர்நிலை மட்டுமல்ல; அது பொருளாதார வளர்ச்சிக்கான அபரிமிதமான வாய்ப்புகளைத் தரும் ஒரு சொத்து. இதனை உணர்ந்து, உலக நாடுகள் கடல்சார் வளங்களை நிலையான முறையில் பயன்படுத்தி பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான ஒரு புதிய அணுகுமுறையை நோக்கி நகர்ந்துவருகின்றன. இந்த அணுகுமுறைதான் 'நீலப் பொருளாதாரம்'.

**நீலப் பொருளாதாரம் என்றால் என்ன?**

நீலப் பொருளாதாரம் என்பது கடலின் அனைத்து வளங்களையும் நிலையான முறையில் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான ஒரு விரிவான கருத்தியல் ஆகும். இதில் கடல் உணவு, கடல்சார் போக்குவரத்து, கடலின் உயிரின பன்வகைமை, கடலடி கனிமங்கள், கடல்சார் சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற பல்வேறு துறைகள் அடங்கும்.

**இலங்கைக்கு நீலப் பொருளாதாரம் ஏன் முக்கியம்?**

பொருளாதார வளர்ச்சி: கடல்சார் துறையில் முதலீடு செய்வதன் மூலம், இலங்கைபுதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, ஏற்றுமதியை அதிகரித்து, பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும்.




உணவு பாதுகாப்பு: கடல் உணவு இலங்கையின் உணவு பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீலப் பொருளாதாரம் மூலம் மீன்பிடித் துறையை மேம்படுத்தி, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யவும், ஏற்றுமதி செய்யவும் முடியும்.

சுற்றுலா: இலங்கையின் கடற்கரைகள் உலகளவில் பிரபலமானவை. நீலப்பொருளாதாரம் மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்தி, வெளிநாட்டு வருவாயை அதிகரிக்க முடியும்.

புதுப்பிக்கத்தக்கஎரிசக்திகடலில் இருந்து காற்று மற்றும் அலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம், இலங்கையின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்யவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் முடியும்.

**நீலப் பொருளாதாரம் இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கும்?**

நேரடி வேலைவாய்ப்புகள்: மீன்பிடி, கடல்சார் போக்குவரத்து, கடல்சார் சுற்றுலா போன்ற துறைகளில் நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும்.

மறைமுக வேலைவாய்ப்புகள்: கடல்சார் உள்கட்டமைப்பு, மீன்பிடி கப்பல்கள் கட்டுதல், சுற்றுலா உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

ஏற்றுமதி அதிகரிப்பு: கடல் உணவு, கடல்சார் பொருட்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம், வெளிநாட்டு வருவாய் அதிகரிக்கும்.

உள்நாட்டு வருவாய்: சுற்றுலாத்துறை வளர்ச்சியின் மூலம் உள்நாட்டு வருவாய் அதிகரிக்கும்.

தொழில்நுட்ப வளர்ச்சி: கடல்சார் தொழில் நுட்பத்தில் முதலீடு செய்வதன் மூலம், தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படும்.

**சவால்கள் மற்றும் தீர்வுகள்**

நீலப்பொருளாதாரத்தைசெயல்படுத்துவதில்சில சவால்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை:

சட்ட மற்றும் கொள்கை சட்டக்கட்டல்கள்: கடல்சார் வளங்களை பாதுகாத்து, நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் சட்ட மற்றும் கொள்கை சட்டக்கட்டல்களை உருவாக்குதல் அவசியம்.

தொழில்நுட்பம்: நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கடல்சார் வளங்களை மேலாண்மைசெய்ய வேண்டும்.

திறன் மேம்பாடு: கடல்சார் துறையில் பணியாற்றும்தொழிலாளர்களுக்குத்தேவையான திறன்களை மேம் படுத்துதல் அவசியம்.

**முடிவுரை:**

நீலப் பொருளா தாரம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு புதிய வழியைத் திறந்து வைத்துள்ளது. ஆனால், இந்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள, அரசு, தனியார் துறை மற்றும் சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம்.

நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் கடல்சார் வளங்களை பாதுகாத்து, பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(கட்டுரையாளர் இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்)

# விபத்தில் இளைஞன் சாவு

பிபில - மஹியங்கனை பிரதான வீதியில் பதுல்லகெட்டிய பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக வேகத்துடன் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று செலுத்துநரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மண் மேடு மற்றும் கொங்கிரீட் பாறை மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, மோட்டார் சைக்கிளின் செலுத்துநர் படுகாயமடைந்துள்ள நிலையில் பின்புறத்தில் அமர்ந்திருந்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கந்தகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் செலுத்துநர் பிபில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# மின்சாரம் தாக்கி சிறுவன் இறப்பு

வில்கமுவ - பெரகனத்த பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி சிறுவன் ஒருவன் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளதாக வில்கமுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாமினிகம, பெரகனத்த பிரதேசத்தைச் சேர்ந்த 7 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவனின் பெற்றோர் வீடு மற்றும் தோட்டத்தை யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக மின்சார வேலியை தயார் செய்து மாலை 06.00 மணிக்கு மின்சாரம் வழங்கி மறுநாள் காலை 06.00 மணிக்கு மின்சாரத்தை துண்டிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில், சிறுவனின் பெற்றோர் மின்சார வேலிக்கு வழங்கிய மின்சாரத்தை துண்டிக்க மறந்துள்ள நிலையில் சிறுவன் வீட்டின் பின்புறம் உள்ள மரத்தில் இருந்து விளாங்காய்களை பறிக்கச் சென்ற போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் வில்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)







### ஜாதகம் பார்க்கவந்த பெண்

# வீட்டிலிருந்தோரை மயக்கி தாலிக்கொடி அபகரிப்பு

### மன்னாரில் சம்பவம்

மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள நறுவிலிக்குளம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு சிறுவன் ஒருவருடன் சென்ற பெண் ஒருவர் ஜாதகம் பார்ப்பதாக கூறி வீட்டில் இருந்தவர்களை சுய நினைவை இழக்கச் செய்து சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில் –

நறுவிலிக்குளம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு சிறுவன் ஒருவருடன் சென்ற பெண் ஒருவர் கோவிலுக்கு நிதி சேகரிக்க வந்துள்ளதாக கூறியுள்ளார். இந்த நிலையில் அவர்கள் பணத்தை கொடுக்க குடிக்க நீர் கேட்டுள்ளனர்.

இதன் போது அவர்கள் குடிக்க நீர் கொடுத்து உள்ளனர். இதன் போது தான் ஜாதகம் பார்த்து கூறுவதாக கூறி பலவந்தப்படுத்தி வீட்டில் இருந்த இருவருக்கு ஜாதகம் பார்த்துள்ளார்.

இதன் போது குறித்த இருவருக்கும் சுய நினைவை இழக்கச் செய்யும் வகையில் மருந்து பூசிய நிலையில் குறித்த இருவரும் சுய நினைவை இழந்த நிலையில் குறித்த பெண் அவர்களில் ஒருவர் அணிந்திருந்த சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியை அபகரித்துச் சென்றுள்ளார்.

மாலை 5 மணிக்கு பின்னர் அவர்களுக்கு சுய நினைவு திரும்பிய நிலையில் குறித்த விடயம் தெரிய வந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, சந்தேகிக்கப்படும் குறித்த பெண் சிறுவன் ஒருவருடன் அந்தப் பகுதியில் வீதியால் சென்ற சி.சி.ரி.வி. காணொளி கட்சியும் வெளியாகி உள்ளது. (05)

# வீசா இன்றி கண்டியில் தங்கியிருந்த வெளிநாட்டுத் தம்பதியினர் கைது

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹந்தான பிரதேசத்தில் குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி, வீசா இன்றி நாட்டில் தங்கியிருந்த வெளிநாட்டு தம்பதியினர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கண்டி சுற்றுலா பொலிஸ் பிரிவு அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் 39, 32 வயதுகளையுடைய ரஷ்ய நாட்டைச் சேர்ந்த தம்பதியர் ஆவர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கண்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கண்டி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)




# உள்நாட்டுத் தோட்டாக்களுடன் ஹபராதுவையில் ஒருவர் கைது



ஹபராதுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீபே சந்தி பகுதியில், உள்நாட்டு துப்பாக்கி மற்றும் ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 6 தோட்டாக்களை வைத்திருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹபராதுவ ,மீபே பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் –

அவர் போதைக்கு அடிமையானவர் எனவும் , கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் துப்பாக்கியை கொலை செய்வதற்காக வேறு ஒருவரே வழங்கியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஹெரோயினுடன் ஒருவர் கிராண்ட்பாஸில் கைது

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் , ஹெரோயின் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு 14 பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து , 05 கிராம் 25 மில்லி கிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது –

சந்தேகநபரை கைது செய்யச் சென்ற போது, மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்ல முற்பட்டதையடுத்து , மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக , மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இந்தோனேஷியத் தூதுவருடன் சர்வமத தலைவர்கள் சந்திப்பு



ஸ்ரீலங்கா – தேசிய சர்வ மத குரு ஒன்றியத்தின் தலைவர் சாஸ்த்ரயதி கலாநிதி கலகம தம்மரன்ஸி நாயக்க தேரர் தலைமையில் சர்வ மதத் தலைவர்களின் பங்களிப்புடன் இந்தோனேஷிய தூதுவர் தேவி குஸ்டினா டோபின்ங்குடனான விசேட கலந்துரையாடல் இலங்கைக்கான இந்தோனேஷிய தூதரகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் சாஸ்த்ரயதி கலாநிதி கலகம தம்மரன்ஸி நாயக தேரர், சிவ ஸ்ரீ கலாநிதி ராமச்சந்திர பாபுசர்மா குருக்கள், அல்–ஹாஜ் அஷ்–ஸெய்யத் கலாநிதி ஹஸன் மௌலானா அல்–காதிரி, கலாநிதி நிஷான் சம்பத் குரே பாதிரியார் உட்பட பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களை பிரதிநிதித்துவப்படுத்தி சகல மதத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கை மற்றும் இந்தோனேஷியா நாடுகளுக்கிடையில் மதங்களுக்கு இடையே மத நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை பேணுவதில், சர்வமத அமைப்பினரின் பங்கு முக்கியம் என்பதை பற்றியும், அதன் விரிவான திட்டங்கள் பற்றியும் விசேடமாக கலந்துரையாடப்பட்டன. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சுகாதார பரிசோதகர்களின் பணிக்கு இடையூறு விளைவித்த உணவக உரிமையாளர் கைது

## ஹற்றனில் சம்பவம்

ஹற்றன் நகரில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அம்பகமுவ பிரதேச, மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் சுகாதார பரிசோதகர்கள் சனிக்கிழமை ஹற்றன் நகர் முழுவதும் பரிசோதனைகளை மேற்கொண்டபோது ஹற்றன் பிரதான வீதி உணவகம் ஒன்றில் அவர்களின் பணிக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவகத்தின் சமையலறை பகுதியில் அசுத்தமான முறையில் உணவுப் பொருள்கள் காணப்பட்டதையடுத்து சுகாதார பரிசோதகர்கள் உணவக உரிமையாளரை எச்சரித்ததுடன் அவ்விடத்தை சுத்தம் செய்ய பணித்துள்ளனர்.

இதையடுத்து அவர்களிடம் முரண்பட்ட உணவக உரிமையாளர் தானே அடுத்த ஹற்றன், நகரசபையின் தலைவர் என்று கூறியதுடன் தனது உணவகத்துக்கு சுகாதார பரிசோதகர்கள் வரக் கூடாது எனக் கூறியுள்ளார்.

மேலும், சுகாதார பரிசோதகர்கள் குழுவுக்கு தலைமைதாங்கிய பிரதான பரிசோதகர் எஸ்.காமதேவனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததுடன் அவரது குடியிருப்பு இருக்கும் இடம் தெரியும் என்றும் தன் மீது நடவடிக்கை எடுத்தால் தானும் எடுக்கவேண்டிய விதத்தில் நடவடிக்கை எடுப்பேன் என்றும் கூறியுள்ளார்.

இதையடுத்து மேற்படி சுகாதார பரிசோதகர் குழுவினர் தமது பணிக்கு இடையூறு விளைவித்த காரணத்தால் இந்த உணவக உரிமையாளருக்கு எதிராக ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்ததுடன் பிரதான சுகாதார பரிசோதகர் எஸ்.காமதேவன் தனக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டல் குறித்து பிரத்தியேகமாக முறைப்பாடொன்றை செய்தார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட உணவக உரிமையாளர் சனிக்கிழமையன்று மாலை ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# போதைப்பொருள் கடத்தல்காரரான 'பேக்கரி ஜனா' சுற்றிவளைப்பில் கைது

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரருமான 'மேர்வின் ஜனா' அல்லது 'பேக்கரி ஜனா' என அழைக்கப்படும் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரலஸ்கமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெஹிவளை வீதி, தெவலமுல்ல சந்தி பகுதியில் 26 ஆம் திகதி சனிக்கிழமையன்று விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது, காரில் பயணித்த பேக்கரி ஜனா 17 கிராம் 60 மில்லிகிராம் 'ஐஸ்' போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபர் 45 வயதுடைய தெஹிவளை, அத்திட்டிய பகுதியைச் சேர்ந்தவராவார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொரலஸ்கமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(05)

# பிரித்தானியா இலங்கை உயர்ஸ்தானிகர் வீட்டில் சமையல்காரருக்கு துன்புறுத்தல்

## பிரிட்டன் பொலிஸார் விசாரணை

பிரித்தானியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் ரோகிதபோகொல்லாகமவின் உத்தியோபூர்வ இல்லத்தில் பணியாளர் ஒருவர் துன்புறுத்தப்பட்டதாக வெளியான தகவல்கள் குறித்து பிரிட்டன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் சமையல்காரராக பணிபுரியும் ஒருவர் தனது நண்பர் ஊடாக பிரிட்டன் பொலிஸாரிற்கு முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த வீட்டிற்கு சென்ற பொலிஸார் அந்த வீட்டில் யாரோ தற்கொலை செய்யவுள்ளனர் என தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

எனினும் சட்ட நடவடிக்கை எவையும் எடுக்கப்படவில்லை.

இராஜதந்திரவிடுபாட்டுரிமைகாரணமாகபொலிஸார் அந்த வீட்டிற்குள் செல்லவில்லை என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை முறைப்பாடு செய்த நபர் அவசரகடவுச்சீட்டின் மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

(05)

# எந்த அச்சுறுத்தலுமில்லை; உயர் பாதுகாப்பு அமுலில்

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

சுற்றுலாப் பயணத் தளங்கள் மற்றும் நாட்டின் பிரதான பகுதிகளில் குண்டுத்தாக்குதல்கள் உட்பட எந்தவொரு ஆபத்தான அச்சுறுத்தல்களும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுநிலை எயார் வைஷ் மார்ஷல் எச்.எஸ்.சம்பத் துய்யகொந்த தெரிவித்துள்ளதாவது -

நாட்டின் பிரதான சுற்றுலாத்தளங்களை மையப்படுத்திய தாக்குல்கள் நடத்தப்படவுள்ளதாக எமக்கு புலனாய்வுக் கட்டமைப்புக்களுக்கு ஒக்ரோபர் முதல் வாரத்திலேயே தகவல்கள் கிடைத்திருந்தன.

இதனையடுத்து தேசிய பாதுகாப்புச் சபை உடனடியாக கூட்டப்பட்டு எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும், இவ்விடயம் சம்பந்தமாக வெளிநாடு தனது பயணிகளுக்காக முன்னெச்சரிக்கையை விடுத்திருந்தது. அதனையடுத்தே விடயம் பகிரங்கமானது.

ஆனால் அதற்கு முன்னதாகவே சுற்றுலாத்தளங்கள் உட்பட நாட்டின் பிரதான பகுதிகள் அனைத்துமே பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது.

தற்போது அந்த நிலைமை மேலும் தீவிரமாக்கப்பட்டு பாதுகாப்பு அதியுச்சமான அளவில் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் எந்தவொரு பிரஜைகளும் அச்சமடைய வேண்டியதில்லை.

நாட்டில் அச்சுறுத்தல் நிலைமைகள் அனைத்தும் களையப்பட்டுள்ளது.

சுற்றுலாப்பயணிகள் உட்பட நாட்டின் பிரஜைகள் அனைவரும் சுதந்திரமாக நடமாட முடியும். - என்றார்.(05)

# சூரியவெள பகுதியில் துப்பாக்கிச் சூடு

பொலிஸாரின் உத்தரவை மீறி பயணித்த லொறியை நோக்கி பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் சூரியவெள பகுதியில் இடம்பெற்றுள்ளது.

லுனுகம்வெஹர பிரதேசத்திலிருந்து சூரியவெள பகுதியை நோக்கி சென்றுகொண்டிருந்த லொறியை சோதனையிட பொலிஸார் வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியும், லொறி அதனை பொருட்படுத்தாமல் கடந்து சென்றுள்ளது.

இதன் காரணமாக லொறியின் டயரை குறிவைத்து பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

அதன் பின்னர், லொறி நிறுத்தப்பட்டு, அதன் சாரதி சூரியவெள பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மேலும், அந்த லொறியில் 17 மாடுகள் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் கூறியுள்ளனர்.

கைதான லொறியின் சாரதியை அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நீரில் மூழ்கி இளைஞர் நிட்டம்புவையில் சாவு

நிட்டம்புவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தபுடுவ பகுதியில் அத்தனகலு ஓயாவில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹப்புத்தளை பிரதேசத்தை சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது -

உயிரிழந்தவர் நிட்டம்புவ பொலிஸ் பிரிவில் தற்காலிகமாக வசிப்பவர் எனவும், நண்பர்கள் சிலருடன் நீராடச் சென்ற போதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் வதுபிட்டிவல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக , மேலதிக விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஓட்டோப் பந்தயத்தில் ஈடுபட்ட 9 பேர் கைது

கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதியில் மாபோல பிரதேசத்தில் சட்டவிரோதமாக ஓட்டோ ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 9 பேர் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார் என வத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டி, தெமட்டகொடை, முகத்துவாரம் மற்றும் கெரவலப்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 முதல் 22 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 9 ஓட்டோக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் நீண்ட நாள்களாக ஓட்டோ ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பரிசோதனைக்காக ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர்கள் மது போதையில் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள்வெலிசறைநீதிவான்நீதிமன்றில்ஆஜர்படுத்தப்படவுள்ளதாக வத்தளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# பெண்ணைக் கொலை செய்ய திட்டமிட்டசந்தேகநபர் கைது

பெண் ஒருவரைக் கொலை செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட சந்தேக நபரொருவர் கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாகக் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் காலி ஹபராதுவ, மீபே பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி ஹபராதுவ பிரதேசத்தில் வசிக்கும் 26 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணை கொலை செய்வதற்கு ஒரு கோடி ரூபா தருவதாக கூறி வர்த்தகர் ஒருவர் கூறியதாக சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. வர்த்தகர் குறித்த பெண்ணை கொலை செய்வதற்கு ரி- 56 ரக துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்களையும் ஹெரோயின் போதைப்பொருளையும் சந்தேக நபருக்கு வழங்கியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

பிரதான சந்தேக நபரான வர்த்தகரைக் கைது செய்வதற்கு குற்றப் புலனாய்வுத்திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## 88 தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதி முதல் இம்மாதம் 26ஆம் திகதி வரையில் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 791 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தேர்தல் வன்முறை தொடர்பில் 7 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 769 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது

## சுற்றுலாவிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் முன்பதிவுகள் இரத்து செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் கவலை வெளியிட்டார்.

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தூதரகங்களுக்கு தெளிவுபடுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்ததார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




# உபாலி பொன்னம்பலம் இயற்கையெய்தினார்



பெரும் சமூக சேவகரும் வடமராட்சி கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவருமான உபாலி எஸ். பொன்னம்பலம் சில நாட்கள் சுகவீனத்துக்கு பிறகு நேற்று திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் காலமானார். அவருக்கு 84 வயது.

கொழும்பில் உபாலி குழுமத்தில் பல உயர் பதவிகளை வகித்த அவர், சொந்த ஊரில் உபாலி பொன்ம்பலம் என்றே அழைக்கப்பட்டுவந்தார். பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் கரவெட்டியில் சமூக சேவைகளை முன்னெடுப்பதற்காக கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தை பல வருடங்களுக்கு முன்னரே உருவாக்கினார். அதன் மூலம் அவர் முன்னெடுத்த பல அபிவிருத்தி திட்டங்கள் அந்த கிராமத்தின் நிலக்காட்சியையே மாற்றிமைத்ததாக பலரும் வியந்து கூறுவர்.

உபாலி பொன்னம்பலம் கரவை விக்னேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்க கொழும்பு கிளையின் தாபகர்களிலும் ஒருவர். அவரது இறுதிச்சடங்கு இன்று காலை பத்து மணியளவில் கரவெட்டியில் இடம்பெறுகிறது.



# டெங்கு நுளம்புகள் பரவும் இடங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் முற்றுகை



மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்தில் பாரிய அளவில் டெங்கு குடம்புகள் பரவியுள்ள இடம் ஒன்றை பொலிஸாரின் பூரண ஒத்துழைப்புடன் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுற்றிவளைத்தனர்.

காத்தான்குடிபொலிஸ்பிரிவுக்குட்பட்டபூநொச்சிமுனை பிரதேசத்தில் இச்சுற்றி வளைப்பு ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

குறித்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த பாரிய அளவிலான நீர்த்தாங்கி ஒன்றினுள் பேருமளவு டெங்கு குடம்பிகள் உற்பத்தியாகியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

நீண்ட நாள்களாக தூய்மைப்படுத்தாது காணப்பட்ட இந்நீர்த்தாங்கியில் பெருமளவு முட்டைகள், மற்றும் டெங்கு குடம்பிகள் காணப்பட்டன.

கிடைக்கப்பெற்றதகவலொன்றையடுத்துபொலிஸார் மற்றும் கடற்படையினருடன் ஸ்தலத்திற்கு விரைந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குறித்த இடத்தை டெங்கு குடம்பிகள் பரவும் வகையில் வைத்திருந்த இடத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

குறித்த இடத்தில் சிவப்பு எச்சரிக்கை ஸ்டிக்கர் ஒட்டப்பட்டதுடன் மூன்று தினங்களுக்குள் குறித்த இடத்தை முழுமையாக தூய்மைப்படுத்தி சுகாதார பரிசோதகர்களுக்கு காண்பிக்க வேண்டும் அதையும் மீறி இவ்வாறு டெங்கு குடம்புகள் பரவும் வகையில் இடத்தை வைத்திருந்தால் மேலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார வைத்திய சுகாதார பரிசோதனைகள் எச்சரிக்கை விடுத்தனர் .

காத்தான்குடி நிலைய மக்கள் தொடர்பாளர் பிரிவு பொறுப்பதிகாரி எம் ஐ எம் ஜவாகிர் தலைமையிலான மேற்படி சுற்றுவளைப்புக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி இருந்தனர் என்பதை குறிப்பிடத்தக்கது.

(05)

# ஹெரோயினுடன் ஒருவர் வாதுவையில் கைதானார்

வாதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாதுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக ,மேலதிக விசாரணைகளை வாதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# ஹெரோயினுடன் ஒருவர் கல்கிஸ்ஸையில் கைது

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரத்மலானை புகையிரத நிலையத்திற்கு அருகில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என கல்கிஸ்ஸை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸ்ஸை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 11 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸார் மேற்கோண்டு வருகின்றனர்.(05)

# வீட்டில் தனிமையில் வசித்த முதியவர் சடலமாக மீட்பு

## யாழில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் தனிமையில் வசித்துவந்த முதியவர் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி கேணியடி பகுதியை சேர்ந்த 79 வயதுடையவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர் ஆகியோர் சனிக்கிழமை டெங்கு ஒழிப்பு கள சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அதன்போது அதிகாரிகள் இந்த முதியவரின் வீட்டுக்குச் சென்றபோது, வீட்டினுள் சைக்கிள்மீது விழுந்த நிலையில் முதியவர் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சடலத்தை பார்வையிட்ட அதிகாரிகள் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

அதன் பின்னர், செய்யப்பட்ட உடற்கூற்று பரிசோதனையின்போது மாரடைப்பு காரணமாகவே முதியவர் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளரின் ஆதரவாளரது கடை மீது தாக்குதல்

## அம்பாறை மாவட்டத்தில் சம்பவம்

இனந்தெரியாதோரினால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் ஒன்றில் நாடாளுமன்ற வேட்பாளரின் ஆதரவாளரது கடை அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு தாளவட்டுவான் பிரதான வீதியில் அமைந்துள்ள தற்காலிக கடை ஒன்றே இவ்வாறு அடித்து உடைக்கப்பட்டுள்ளது.



இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமைஇரவு இடம்பெற்றுள்ளதுடன் அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில்ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக சங்குசின்னம்இலக்கம் 5 இல் போட்டியிடும் வேட்பாளர் வைத்தியர் பிரகாஸின் ஆதரவாளரது கடையே அடித்து உடைக்கப்பட்டுள்ளது.



சம்பவ இடத்திற்கு குறித்த வேட்பாளர் சென்று சேதமடைந்த கடையை பார்வையிட்டதுடன் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு அளிக்க ஆதரவாளருடன் சென்றுள்ளார்.

இதன் போது பொலிஸ் நிலையத்தில் குறித்த முறைப்பாடு ஏற்றுக்கொள்ளாமையின் காரணமாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டதாக பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர் ஊடகங்களிடம் குறிப்பிட்டார்.

மேலும், குறித்த கடையில் அரசியல் விடயங்களை தாங்கள் உரையாடுவதாகவும் இதனால் இக்கடை உடைப்பு ஏனைய தரப்புகளால் உடைக்கப்பட்டிருக்கக் கூடும் என வேட்பாளர் வைத்தியர் பிரகாஸ் தெரிவித்தார்.

(05)

# ஐஸ் போதைப்பொருள்களுடன் தேவாலமுல்லயில் ஒருவர் கைது

பொரலஸ்கமுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவாலமுல்ல பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொரலெஸ்கமுவபொலிஸாருக்குகிடைத்ததகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தெஹிவளை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் ஆவார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 17 கிராம் 60 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், சந்தேக நபர் பயன்படுத்திய கார் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரலஸ்கமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் சாவு: இரண்டு குழந்தைகள் உட்பட ஐவர் காயம்

கும்புக்கெடே - பன்னெக்கம நெலவ வீதியில் கும்புக்வெள பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

நெரியாவ, கும்புக்கெடே பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

பன்னெக்கமவிலிருந்துநெலவநோக்கிப்பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று எதிர் திசையில் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும், மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மற்றும் இரு குழந்தைகளும் படுகாயமடைந்து ஹிரிபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் இளைஞன் ஒருவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.10.2024இல் வெளியிடப்பெற்றது